மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அவர்களுடைய நிலங்களில் எவ்வளவு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதற்கு எனக்கு இந்த மன்றத்திலே விவரம் கிடையாது. சட்டத்திலே மேய்ச்சல் காடுகள், தென்னந்தோப்புகள், இப்படியெல்லாம் சில விதிவிலக்குகள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. கோவை மாவட்டத்தில் காங்கேயம் பகுதி முழுவதும் மேய்ச்சல் காடுகளாகத்தான் இருக்கின்றன என்பதாலே விதிவிலக்கிலே வாய்ப்பு ஏற்பட்டிருக்கலாம். அதுகூட கூடாது என்ற முறையிலே சட்டமன்றத்திலே பேசப்பட்டது. முன்னாள் அமைச்சர் பட்டயக்காரர் அவர்களிடத்திலே பேசிக்கொண்டிருந்தபொழுது, "எனக்கு 30 ஏக்கரா தான் இருக்கிறது. என் மனைவி பேரிலே 30 ஏக்கரா இருக்கிறது. நான் சாதாரண விவசாயி" என்றுதான் சொல்லு கிறார்கள்.

திரு. எம். சுரேந்திரன் : சார், உச்சவரம்புச் சட்டம் வருவதற்கு முன்னாலேயே, அது வருகிறது வருகிறது என்று சொல்லி அவரவர் களுடைய பண்ணையாட்கள், நாய்கள் மற்றும்.......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் அந்தச் சொல்லைத் திரும்ப பெற்றுக் கொள்ள வேண்டும்.

திரு. எம். சுரேந்திரன் : நாயக்கர்கள் என்று சொல்லுவதற்கு நாய்கள் என்று சொல்லிவிட்டேன் என்று சொல்லிக்கொள்கிறேன். அவரவர்களுடைய பண்ணைக்காரர்கள், நாயக்கர்கள், சொந்தக்காரர்கள என்று இப்படி பல பேர்கள் பெயரிலே நிலங்களை மாற்றிப் பதிவு செய்து கொண்டார்கள் என்று சொல்லப்படுகிறதே, அவை உண்மைதானா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அவை மிக அப்பட்டமான உண்மையாகத்தான் இருக்க வேண்டும். நிலத்திலே உழைப்பவர்களுக்கும் குடியானவர்களுக்கும் பகிர்ந்து கொடுக்க வேண்டுமென்பதற்காக புனிதமான நோக்கத்தோடு கொண்டுவரப்பட்ட சட்டம் "மலையைக் கிள்ளி எலியைப் பிடித்தார்கள்" என்ற மாதிரி முடிந்திருப்பதைப் பார்த்தால் தவறுகள் நடந்திருக்கும் என்பதை ஊகிக்க இடம் உண்டு.

திரு. பி. ஜி. கருத்திருமன் : உதவி சபாநாயகர் அவர்களே, கனம் உறுப்பினர் கேள்வி கேட்ட சமயத்திலே பழைய கோட்டைக் பட்டயக்காரருக்கு 12,000 ஏக்கரா நிலம் இருப்பதாகச் சொன்னார்கள். ஆனால், சர்க்காரிடத்திலே ரெவின்யூ ரெக்கார்டுகள் இருக்கின்றன. அமைச்சர் அவர்கள், தனிப்பட்ட முறையில் தன்னிடம் பேசிக்கொண்டிருந்தபொழுது 30 ஏக்கரா இருப்பதாக கூறினார் என்று சொல்கிறார். ஆகவே, அந்தப் பிரச்சினையைப்பற்றி சட்டமன்றத்திலே புகார் சொல்வதை விட, ரெவின்யூ ரெக்கார்டுபடி எவ்வளவு இருக்கிறது என்பது சர்க்காருக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இந்தக் கேள்விக்கு மன்றத் திலே தகவல் இல்லையே தவிர, பழைய மந்திரி அவர்கள் நேரிலே பேசிக்கொண்டிருந்தபொழுது "என்னிடத்தில் 30 ஏக்கராதான் இருக் கிறது. உங்களையெல்லாம் விட நான் சின்ன விவசாயி" என்று சொல்லிக்கொண்டிருந்தார். எதற்காக அந்தக் கருத்தைச் சொல்கிறாரோ தெரியவில்லை. ஆனால், சட்டப்படி எல்லாம் ஒழுங்காக இருக்கிறது என்பது தான் உண்மை.

Madras Veterinary College.

*147 *Q*.—THIRU A. M. RAJA : Will the Hon. the Minister for Agriculture be pleased to state :—

(*a*) whether it is a fact that the Flaying course for butchering was not conducted in the Madras Veterinary College during the years 1966–67 and 1967–68 for want of candidates ; and

1968 ஆகஸ்ட் 26]

(b) whether there is a lecturer for conducting the above course ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) ஊன் விற்பவர்களுக்கான தோல் உரிப்பது குறித்த பாடமுறை 1966-67-ல் சென்னை, கால்நடை மருத்துவக் கல்லூரியில் நடத்தப்படவில்லை. 1967-68-ம் ஆண்டுககான பாடமுறை 31—10—1967 முதற்கொண்டு தொடங்கப்பட்டது.

(இ) ஆம்.

கோவை விவசாயக் கல்லூரி.

*148 வின.—திரு. செ. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழககண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1967-68-ல் கோவை அரசினர் விவசாயக் கல்லூரியில் பதவி ஓய்வு பெறும் காலத்திற்கப்புறமும் பதவி நீடிப்பு செய்யப்பட்ட பேராசிரியர்கள் யார் யார் ?

(இ) இப்பதவி நீடிப்புகளுக்கான தனித்தனிக் காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) எவருமில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

Madras Panchayats Act

*153 Q.—THIRU A. M. RAJA : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether there is any proposal to amend the Madras Panchayats Act, 1958 ; and

(b) if so, when ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) ஆம்.

(இ) இயன்ற அளவுக்கு விரைவில் திருத்தப்படும்.

திரு. ஏ. எம். ராஜா : தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றிய தலைவரையும், ஊராட்சி மன்றத் தலைவரையும் நேரடியாகத் தேர்ந்தெடுக்கும் முறையை இந்தச் சட்டததிருத்தத்தில் கொண்டுவர முயற்சி எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : சட்டத்தைத் திருத்த முயற்சி மேற்கொள்ளும் பொழுது கனம் அங்கத்தினர் அவர்களுடைய கருத்தும் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படும்.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது : பேரவைத் தலைவரவர்களே, பொது மக்கள் நேரடியாகத் தேர்ந்தெடுக்கும் முறையில்லாத காரணத்தால ஆள் தூக்குகின்ற நிலைமையும் ஒருவரையொருவர் கொலை செய்யும் சூழலும் இருப்பதை அரசு அறியுமா? எனவே, அதற்குப் பரிகாரம் தேடும் முறையில் பொது மக்களே நேரடியாகத் தேர்ந்தெடுப்பதற்கான சூழலை ஏற்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : ஏற்கனவே உறுப்பினர் கேட்ட கேள்விக்கு இதற்கான விளக்கம் தரப்பட்டிருக்கிறது.